AIL ✓

<u>சுருக்கம்</u>

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 110–விதியின் கீழ் 100 ஒன்றியங்களில் ரூ.150 கோடியில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டுவதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பு – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் செயல்படும் 20 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் நிலங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்க வேளாண்மை இயக்குநருக்கு முன் நுழைவு அனுமதி வழங்கும் பொருட்டு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வேளாண்மைத் (வேவி.2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.85 நாள்:24.02.2016

திருவள்ளுவர் ஆண்டு 2047,
மாசி திங்கள் 12–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.73, வேளாண்மைத் (நீ.மே.1) துறை, நாள் 23.03.2015.
2. அரசாணை (நிலை) எண்.241, வேளாண்மைத் (நீ.மே.1) துறை, நாள் 04.11.2015.
3. அரசாணை (நிலை) எண்.45, வேளாண்மைத் (நீ.மே.1) துறை, நாள் 04.02.2016.
4. வேளாண்மை இயக்குநர் நேர்முக கடித எண்,விதைகள் 3/8566/2014, நாள் 07.01.2016.
5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் கடித எண்.விகுதி.4/22672/2015, நாள் 22.08.2015, 18.12.2015, 02.02.2016 மற்றும் 17.02.2016.

----

<u>ஆணை:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 110–விதியின் கீழ் 100 ஒன்றியங்களில், ரூ.150 கோடியில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டுவதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பொதுப்பணித்துறை/வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் மூலமாக ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையப்பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காணும் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்புதலும், மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் மூலமாக ஒருங்கிணைந்த வேள்ாண்மை விரிவாக்க மையப்பணிகளை மேற்கொள்வதற்கு பதிலாக பொதுப்பணித்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்) மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்ள திருத்தம் வழங்கியும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடிதங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் 100 ஒன்றியங்களில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து, தென்காசி, சங்கரன்கோவில், பண்ருட்டி, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், மன்னார்குடி, புதூர், தேனி, ஒரத்தநாடு, ஆண்டிமடம், புதுப்பாளையம், திருத்துறைப்பூண்டி, பரனூர், விளாத்திக்குளம், கடையநல்லூர், பாவூர்சத்திரம், குறிஞ்சிப்பாடி, கம்பம், சின்னமனூர், தாத்தயங்கார்பேட்டை ஆகிய 20 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள நிலத்தினை ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் அமைத்திடும் பொருட்டு உரிய ஒதுக்கீடு செய்திட சம்மந்தப்பட்ட விற்பனைக்குழு செயலாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள இசைவின் அடிப்படையிலும், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987–ன் பிரிவு 16–ல் விற்பனைக்குழுவிற்குட்பட்ட அசையா சொத்து ஏதுவும் அரசின் முன் அனுமதி இல்லாமல் விற்பனை, குத்தகை அல்லது மற்றைய வழி மூலமாக உரிமை மாற்றம் செய்யப்படுதல் ஆகாது என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், மேலும், தலைமைப்பொறியாளர் (வேளாண் பொறியியல்) அவர்களால் கோரப்பட்டதற்கிணங்க, ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைப்பதற்கு மேற்காணும் 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 40 மீட்டர் நீளம், 40 மீட்டர் அகலம் கொண்ட 40 செண்ட் நிலம் ஒதுக்கீடு செய்து வேளாண்மை இயக்குநருக்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட ஏதுவாக அனுமதி அளிக்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்காணும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைப்பதற்கு தென்காசி, சங்கரன்கோவில், பண்ருட்டி, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், மன்னார்குடி, புதூர், தேனி, ஒரத்தநாடு, ஆண்டிமடம், புதுப்பாளையம், திருத்துறைப்பூண்டி, பரனூர், விளாத்திக்குளம், கடையநல்லூர், பாவூர்சத்திரம், குறிஞ்சிப்பாடி, கம்பம், சின்னமனூர் மற்றும் தாத்தயங்கார்பேட்டை ஆகிய 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 40 மீட்டர் நீளம், 40 மீட்டர் அகலம் கொண்ட 40 செண்ட் நிலம் ஒதுக்கீடு செய்து வேளாண்மை இயக்குநருக்கு முன்நுழைவு அனுமதி வழங்கிட ஏதுவாக, 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டப்பிரிவு 16–இன் படியும், இதன் காரணமாக சம்மந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் விரிவாக்கத்திற்கும், பிற எதிர்காலத் தேவைகளுக்கும் போதுமான/தேவையான நிலம்

கையிருப்பில் உள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச. விஜயகுமார்,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை-32
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்), சென்னை-35.
தொடர்புடைய விற்பனைக்குழு செயலாளர், (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், சென்னை - 32 மூலமாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை-108.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை -9.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்புநேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
பொதுப்பணித்துறை, சென்னை-9/சென்னை-5.
வேளாண்மை (நீ.மே.1) துறை, சென்னை-9
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை-9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24.2.16
பிரிவு அலுவலர்.
24.2.16